Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**
Defence
Court

| | |
|---|---|
| Name | **ராஷிக்கான்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday 9th day of September 2025.**

**2 வது எதிரி இளம்சிறார் 5 மற்றும் 6 எதிரிகளக்கு இறப்பின் காரணமாக குற்றம் அற்றுவிட்டது. 1 வது எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் வடலூரில் குடியிருக்கிறேன். நான் வடலூரில் நெய்வேலி பிரதான சாலையில் New India Medicals என மருந்தகம் நடத்தி வருகிறேன். கடந்த 17.05.2017 ம் தேதி எனது கடையை நான் மூடிவட்டு இரவு 10.45 மணிக்கு நான் கடையை சாத்திய போது கண் இமைக்கம் நேரத்தில் என் கடைக்கு முன்பாக பக்கத்து கடை பார் நடத்தும் ரவிச்சந்திரன் என்பவரை சுமார் 6, 7 நபர்கள் கூட்டமாக வந்து வெட்டினார்கள். கத்தி மற்றும் அறுவாள்களால் வெட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். ரவிச்சந்திரன் உடன் ஒரு நபரும் நின்று கொண்டு இருந்தார். அவர் என்னஆனார் என்று தெரியவில்லை. உடனே நான் வடலூர் காவல் நிலையம் சென்று இது குறித்து தகவல் கொடுத்தேன். கும்பலாக வந்தார்கள். ஆஜரில் இருந்து 3 மற்றும் 4 எதிரிகள் சம்பவத்தில் இருந்தார்களா என்று என்னால் சொல்ல இயலவில்லை. 1வது எதிரி அருள்பாண்டியன் (இன்று ஆஜரில் இல்லை மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது ) மற்றும் அவரை சேர்ந்த நபர்கள் வெட்டியதாக பிறகு கேள்விபட்டேன். இறந்த ரவிச்சந்திரன் நடத்திய பாரில் கொடுக்கல் வாங்கல் குறித்த பிரச்சனை காரணமாக சம்பவம் நடந்தது என்று கேள்விபட்டேன். போலிசார் அன்றே என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை: (மற்ற எதிரிகளுக்காகவும் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது)**

அருள்பாண்டியன் மற்றும் அவரது தரப்பினர்கள் பாரில் கொடுக்கல் வாங்கல் குறித்த பிரச்சனை காரணமாக மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டதாக போலிசார் சொல்லி நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் இரவு 11 மணிக்யெல்லாம் சம்பவ இடம் வந்து விட்டார்கள். நான் கடையை அடைக்கும் சமயத்தில் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். வெளியே இருக்கும் விளக்கின் ஸ்விட்ச் ஆப் செய்துவிட்டு தான் கடையின்

ஷட்டரை மூட முடியும் என்றால் சரிதான். அன்று கடை ஷட்டரை மூடி விட்டு வெளியே வரும்போது தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தில் ஈடுபட்ட 6, 7 நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. 1வது எதிரி அருள்பாண்டியனை நான் இதுவரை பார்த்தது கிடையாது என்றால் சரிதான். என்னிடம் சம்பவம் குறித்து போலிசார் எழுதி கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். இதே விவரத்தை தான் போலிசாரிடம் சொல்லி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன விவரங்கள் அதில் எழுதி இருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து 100 மீட்டர் தொலைவில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**

Defence

Court

| | |
|---|---|
| Name | சுப்பிரமணியன் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday 9th day of September 2025.**

**2 வது எதிரி இளம்சிறார் 5 மற்றும் 6 எதிரிகளக்கு இறப்பின் காரணமாக குற்றம் அற்றுவிட்டது. 1 வது எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் வடலூரில் வசிக்கிறேன். இறந்த ரவிச்சந்திரனை தெரியும். எப்போதவது அவரிடம் வேலைக்கு செல்வேன். சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பாக ரவியை வெட்டிவிட்டதாக கேள்விபட்டேன். அவரது கடைக்கு சென்று பார்த்தேன். அவரது கடைக்கு பக்கத்தில் இருந்த மெடிக்கல் கடையின் வாசலில் அவர் வெட்டுபட்டு கிடந்தார். இரத்தம் என்றால் எனக்கு பயம் என்பதால் நான் தொலைவில் இருந்துவிட்டேன். என்னுடன் ரவி கடையில் வேலை செய்யும் சக்கரவர்த்தி என்பவரும் வந்து பார்த்தார். ரவியின் பெற்றோரும் வந்தார்கள். போலிசார் வெட்டுபட்டு கிடந்த ரவியை அரசு மருத்துவமணைக்கு எடுத்துச்சென்றார்கள். அந்த சமயத்தில் ரவிக்கு உயிர் இருந்ததா என்று எனக்கு தெரியவில்லை.

**1 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை: (மற்ற எதிரிகளுக்காகவும் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது)**

வெட்டுபட்ட இரவு 10 ல் இருந்து 11 மணிக்குள் நான் சென்று பார்த்தேன். நான் சம்பவ இடம் சென்ற பிறகு தான் ரவியின் பெற்றோர் வந்தார்கள். போலிசார் எப்போது வந்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. நான் வந்த சமயத்தில் கும்பலாக இருந்தது.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.3**

Defence

Court

| | |
|---|---|
| Name | சிவகாமசுந்தரி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday 9th day of September 2025.**

**2 வது எதிரி இளம்சிறார் 5 மற்றும் 6 எதிரிகளக்கு இறப்பின் காரணமாக குற்றம் அற்றுவிட்டது. 1 வது எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் வடலூாரில் குடியிருக்கிறேன். இறந்த ரவிச்சந்திரன் எனது கணவர். கடந்த 17.05.2017 இரவு 10 மணிக்கு மேலே என் கணவர் நடத்தும் பாருக்கு பக்கத்தில் உள்ள மெடிக்கல் கடைக்கு எனது மூத்தார் மகள் எனது கணவருக்கு அடிப்பட்டு கிடப்பதாக சொல்லி என்னை அழைத்து சென்றார். என் கணவர் அங்கே அடிப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். யார் செய்து இருக்கலாம் என்று எனக்கு தெரியவில்லை. அருன்பாண்டியன் என்ற என் கணவர் நடத்திய பாரில் வேலை செய்யும் நபருக்கும் காயம்பட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*